ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2178/27 - 2020 ජූනි මස 04 වැනි බ්‍රහස්පතින්දා - 2020.06.04

*2178/27 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆந் திகதி வியாழக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

***1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டம்***

*92 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1974 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க, தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபைச் சட்டத்தின், 92 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம், நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர், மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், குறித்த சபைக்கு நீர்கொழும்பு கழிவுநீர் மீள்சுழற்சி செயற்திட்டத்தின் கீழ் ஒவிடீயாவத்த கழிவுநீர் குழாயைப் பதிப்பதற்காக 3 மீற்றர் அகலமுள்ள வீதியின் வழியுரிமையை சுவீகரித்துக்கொள்ள வேண்டியுள்ளமையினால், இங்கு கீழ்க்காணப்படும் அட்டவணையில் குறித்துக்காட்டப்பட்டுள்ள காணிப்பகுதியின் அசையாச் சொத்துரிமையை சுவீகரித்துக்கொள்ளும் கட்டளையினூடாக அனுமதியளிக்கின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சர்.*

*நகர அபிவிருத்தி, நீர் வழங்கல் மற்றும் வீடமைப்பு வசதிகள் அமைச்சு,*
*இலக்கம் 35, "லக்திய மெதுர",*
*புதிய பாராளுமன்ற வீதி,*
*பெலவத்தை,*
*பத்தரமுல்லை,*
*2020, ஏப்பிறல் 22.*
*5/3/GQ/01.*

1A – G 32298 – 28 (2020/06)

*இவ் அதி விசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

கம்பஹா மாவட்டத்தில், நீர்கொழும்பு பிரதேச செயலகப் பிரிவில், 77 வடக்கு பல்லன்சேன கிராம அலுவலர் பிரிவில் ஒவிடீயாவத்த கிராமத்தில் அமைந்துள்ள இத்துடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள திட்டப்படத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள 20.75 பேர்ச் விஸ்தீரணத்தையுடைய பின்வரும் எல்லைகளுக்குள் அமைந்துள்ள காணிப்பகுதி.

வடக்கு : நீர்கொழும்பு நகர சபையின் திண்மக் கழிவு அகற்றப்படும் இடம் ;
கிழக்கு : உத்தேச கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (திரு. கே. எல். சீ. ஏ. பெரேரா அவர்களின் காணி) ;
தெற்கு : தனியார் காணிப்பகுதி ;
மேற்கு : ராணுவ வீரர் லக்ஷ்மன் ஜயசிங்ஹ மாவத்தை.

*காணிக்கு உரிமை கோருகின்றவரின் பெயரும் முகவரியும் : தெரியாது*

*06-146*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.